**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண். 86/2018**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆறுமுகம் | மதம் | : |
| த/பெ | : புச்சிக்கான் | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**02.08.2024**

**வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு எதற்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா வாங்குவதற்காக தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கு சொத்தை யாரிடம் இருந்து வாங்கினேன் என்றால் துரையிடம் இருந்து வாங்கினேன். வழக்கு சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 57 செண்ட் ஆகும். வழக்கு சொத்து அரசன் பெயரில் உள்ளது என்றால் சாமிக்கான் பெயரில்தான் உள்ளது. நான் சொல்வது பொய் என்றாலும் இன்றுவரை அரசன் பெயரில்தான் தாவா சொத்தின் பட்டா உள்ளது என்றாலும் சரியல்ல. அரசன் இறந்த பின்பு அவரது வாரிசுகளுக்கு பட்டா மாறியுள்ளது என்றால் சரியல்ல.

2. அரசன் பெயரில் பட்டா உள்ள நிலையில் நாங்கள் வாங்கிய சொத்துக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இன்றுவரை அரசன் பெயரில்தான் வருவாய் ஆவணங்கள் உள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் 4 முதல் 7 பிரதிவாதிகளை தேவையற்று சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண். 86/2018**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாபு | மதம் | : |
| த/பெ | : கொள்ளாபுரி | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**02.08.2024**
**வா.சா. 2 ன் முதல் விசாரணை**

**1.** நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் தமிழில் தாக்கல் செய்கிறேன். நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)